அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை. அதற்கான பதிலை அவர்கள் கூறும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் கூட்டுறவு மில் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. இந்த மில்லில் வசூலிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கூட்டுறவு மில் என்பது அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருப்பதால், இதிலிருந்து வசூலிக்க முடியவில்லை என்பது வருத்தத்திற்கு உரியது; இதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது, இந்த செஸ் ஃபண்ட் என்பது தனித்தனியாக வரவிலே கணக்கு வைக்கப்படாமல் ஒரே ஃபண்டாக இருந்தது. தனித்தனியாக, மாவட்டத்திற்கு மாவட்டம் தனியாக கணக்கு வைக்கவேண்டும் என்று வந்திருக்கிறது என்றேன். ஆனால் ரூ. 25,000 தான் வட ஆற்காடு மாவட்டத்திற்குச் செலவு செய்யப்படுகிறது என்றால், வருவாயே இல்லாமல் செலவு செய்கிறோம் என்றால், அதை ஒரு மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலையிலிருந்து வசூலிக்க வேண்டும் என்பதல்ல. முன்னால் கணக்கு பொதுவாக இருந்தது. இப்பொழுது தனித்தனியாக இருக்கிறது. ஒரு சர்க்கரை ஆலையிலிருந்து வசூலிக்கப்படுகிற செஸ் பணத்தை அந்த ஏரியாவிலே மட்டும்தான் செலவழிக்கவேண்டும் என்பதிலே நியாயமில்லை என்று சொல்வதிலே நியாயம் உண்டு.

MR. CHAIRMAN : Questions are over.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN: I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 (L. A. Bill No. 10 of 1975) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.